*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC**.83/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**-2 (**LW**-3)*

*Name / Father's Name:* ***திரு.தங்கேஷ்வரன் த/பெ. பெருமாள்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.09.2023.*
துவக்க நேரம் 12.00
**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது நாகியம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 06.05.2016 ம் தேதி காலை சுமார் 9.30 மணியளவில் நாகியம்பட்டி அம்பேத்கர் காலணியில் உள்ள மோகனா மளிகை கடைக்கு எதிரே ரோட்டின் ஓரமாக நானும், கலைச்செல்வன் என்பவரும் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எனது மாமா முருகேசன் அவரது மகன் மெய்யழகனை கூட்டிக்கொண்டு எங்களுக்கு எதிரே இருந்த மோகனா மளிகை கடைக்கு மளிகை ஜாமான் வாங்க சென்றார்.

2) அப்போது ரோட்டின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஜல்லி ஏற்றிக்கொண்டு சென்ற TN 77 A 3177 என்ற டிப்பர் லாரி எவ்வித சைகையும் செய்யாமல் சென்றவேகத்திலேயே திரும்ப ரிவர்ஸ் வந்தது. அப்போது கடையில் எனது மாமா பொருள் வாங்கிக்கொண்டிருந்தார். கடையின் முன்பாக மெய்யழகன் நின்றிருந்தார். அப்போது மெய்யழகன் மீது ரிவர்ஸ் வந்த லாரி மோதி, லாரியின் இடதுபின்பக்க சக்கரம் அவரது தலையின்மீது ஏறி சம்பவயிடத்திலேயே அவர் இறந்துவிட்டார்.

3) அக்கம் பக்கத்திலிருந்த நாங்கள் ஓடிச்சென்று பார்த்தோம். மெய்யழகன் இறந்த நிலையில் கிடந்தார். அதனால் லாரியை ஓட்டிவந்த ஆஜர் எதிரியை பிடித்து அங்கேயே உட்கார வைத்தோம். ஆஜர் எதிரியின் பெயர் கல்யாணசுந்தரம் என்று தெரிந்துகொண்டோம். போலிசாருக்கும் தகவல் சொன்னோம். போலிசார் வந்து எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றார்கள். நடந்த சம்பவம் பற்றி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) இறந்த மெய்யழகன் எனது அக்கா மகன் என்றால் சரிதான். போலிசார் எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த இடத்திலும், காவல் நிலையத்திலும் விசாரணை செய்தார்கள். எத்தனை மணிக்கு போலிசார், என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சுமார் 09.45 மணியளவில் விசாரித்தார்கள். சம்பவம் நடந்த இடம் மளிகை கடைக்கு முன்பாக, கிழமேல் ரோட்டில் என்றால் சரிதான்.

2) லாரி எந்த திசையில் இருந்து வந்து எந்த திசையில் ரிவர்ஸ் திரும்பியது என்றால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து, பிறகு மேற்கு பக்கமாக ரிவர்ஸ் திரும்பியது. லாரி ஜல்லி ஏற்றிக்கொண்டு தான் வந்தது என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வழக்கறிஞராக உள்ளேன். பொதுவாக லாரி ஜல்லி ஏற்றிக்கொண்டு வரும்போது ரிவர்ஸ்சில் வேகமாக வர இயலாது என்றும், வழக்கிற்காக லாரி ரிவர்ஸ்சில் வேகமாக வந்தது என்று சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

3) விபத்து ஏற்பட்டதிலிருந்து வழக்கு பதியப்படும்வரை நான், புகார்தாரர் உடன்தான் இருந்தேன் என்றால் சரிதான். புகார்மனுவினை நான்தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் இல்லை. உண்மையில் புகார் மனுவினை வழக்கறிஞர் என்ற முறையில் நான்தான் எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றும், தற்போது அதனை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இறந்த மெய்யழகனுக்கு இறக்கும்போது 7 வயது என்றால் சுமார் 8-9 வயது இருக்கும்.

4) சத்தம் கேட்டபிறகுதான் விபத்தினை நான் பார்த்தேன் என்றால் லாரி சத்தம் கேட்டு பார்த்தேன். (சாட்சி தற்போது விபத்து நடக்கும்போது நேரடியாக பார்த்தேன் என்று கூறுகிறார்). நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், விபத்தில் இறந்த மெய்யழகன் எனது உறவினர் என்பதாலும், நான் வழக்கறிஞர் என்பதாலும் புகார்தாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) உண்மையில் குழந்தை மெய்யழகன் தான் அவரது அப்பாவின் கையை விட்டுவிட்டு கவனக்குறைவாக லாரியின் பின்புறமாக சாலையை கடந்து ஓடிவந்துவிட்டது என்றும், அதனால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான்

முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், என்னை போலிசார் சம்பவயிடத்தில் வைத்து விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.16

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC**.83/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**-3 (**LW**-4)*

*Name / Father's Name: **திரு.கலைச்செல்வன் த/பெ. பெரியசாமி***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.09.2023.*

துவக்க நேரம் 12.17

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது நாகியம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 06.05.2016 ம் தேதி காலை சுமார் 9.30 மணியளவில் நாகியம்பட்டி அம்பேத்கர் காலணியில் உள்ள மோகனா மளிகை கடைக்கு எதிரே ரோட்டின் ஓரமாக நானும், தங்கேஷ்வரன் என்பவரும் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது முருகேசன் அவரது மகன் மெய்யழகனை கூட்டிக்கொண்டு எங்களுக்கு எதிரே இருந்த மோகனா மளிகை கடைக்கு மளிகை ஜாமான் வாங்க சென்றார்.

2) அப்போது ரோட்டின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஜல்லி ஏற்றிக்கொண்டு சென்ற TN 77 A 3177 என்ற டிப்பர் லாரி எவ்வித சைகையும் செய்யாமல் சென்றவேகத்திலேயே திரும்ப ரிவர்ஸ் வந்தது. அப்போது கடையில் முருகேசன் பொருள் வாங்கிக்கொண்டிருந்தார். கடையின் முன்பாக மெய்யழகன் நின்றிருந்தார். அப்போது மெய்யழகன் மீது ரிவர்ஸ் வந்த லாரி மோதி, லாரியின் இடதுபின்பக்க சக்கரம் அவரது தலையின்மீது ஏறி சம்பவயிடத்திலேயே அவர் இறந்துவிட்டார்.

3) அக்கம் பக்கத்திலிருந்த நாங்கள் ஓடிச்சென்று பார்த்தோம். மெய்யழகன் இறந்த நிலையில் கிடந்தார். அதனால் லாரியை ஓட்டிவந்த ஆஜர் எதிரியை பிடித்து அங்கேயே உட்கார வைத்தோம். ஆஜர் எதிரியின் பெயர் கல்யாணசுந்தரம் என்று தெரிந்துகொண்டோம். போலிசாருக்கும் தகவல் சொன்னோம். போலிசார் வந்து எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றார்கள். நடந்த சம்பவம் பற்றி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) புகார்தாரர் முருகேசன் எனக்கு உறவினர் என்றால் இல்லை. சாட்சி தங்கேஷ்வரன் எனது நண்பர் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கும், எனது வீட்டிற்கும் இடையே எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 100-150 மீ துாரம் இருக்கும். விபத்து நடந்த பின்னர்தான் நான் பார்த்தேன் என்றால் சரியல்ல, நான் பார்த்துக்கொண்டிருந்தபோதே தான் லாரி ரிவர்ஸ் வந்து, விபத்து ஏற்பட்டுவிட்டது.

2) என்ன சம்பவத்தை பார்த்தேன் என்றால் லாரி வடக்கிலிருந்து தெற்குநோக்கி சென்றுவிட்டு, உடனே ரிவர்ஸ் வந்து, மோகனா கடை முன்பு நின்றிருந்த பையன் மீது மோதிவிட்டது. விபத்து கடை அருகில் அல்லது ரோட்டில் எங்கு நடந்தது என்றால் கடை அருகே ரோட்டின் முன்பாகத்தான் நடந்தது.

3) போலிசார், என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் விபத்து நடந்த மறுநாள் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். போலிசார், என்னை காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்றால் சுமார் காலை 11.00 மணியளவில் விசாரித்தார்கள். நான் சொன்ன நேரத்தில் போலிசார் என்னிடம் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு என்னுடன் தங்கேஷ்வரனும் வந்தார் என்றால் சரிதான்.

4) நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், விபத்தில் இறந்த மெய்யழகன் எனது நண்பர் தங்கேஷ்வரனின் உறவினர் என்பதால், அவர் கேட்டுக்கொண்டதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) உண்மையில் குழந்தை மெய்யழகன் தான் அவரது அப்பாவின் கையை விட்டுவிட்டு கவனக்குறைவாக லாரியின் பின்புறமாக சாலையை கடந்து ஓடிவந்துவிட்டது என்றும், அதனால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், என்னை போலிசார் சம்பவயிடத்தில் வைத்து விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.31

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.